பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
02 04 2026 THURSDAY 12 40 PM

ஆகாஷவாணி
(Tune)
செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த வேண்டும் என்பதே தமது அரசின் முக்கிய நோக்கமாகும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. பெட்ரோலிய வேதிப்பொருட்கள் மீதான இறக்குமதி வரி, ஜூன் மாதம் இறுதி வரை ரத்து செய்யப்படுவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

3. பாதுகாப்பு தளவாடங்களின் ஏற்றுமதி கடந்த நிதியாண்டில் 38 ஆயிரத்து 424 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.

4. மேற்குவங்கத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளுக்கு எதிராக நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களுக்கு உச்சநீதிமன்றம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

5. உலக பாரா வில்வித்தைப் போட்டியின் ஆடவர் மற்றும் மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

... இனி விரிவான செய்திகள்...

<<<<<< >>>>>

மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த வேண்டும் என்பதே தமது அரசின் முக்கிய நோக்கமாகும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அரசு சேவைகளை மேம்படுத்துவதற்கான பயிற்சி வார விழாவில் காணொலி வாயிலாக அவர் உரையாற்றினார்.

சிறந்த நிர்வாகத்தை அளிப்பதோடு மட்டுமின்றி, மக்கள் நலனை அடிப்படையாக கொண்டதாக அரசு நிர்வாகம் இருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் மத்திய அரசு செயல்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில், அரசு அதிகாரிகள் பணியாற்ற வேண்டும் என்ற நோக்கில் நவீன பயிற்சிகள் அவர்களுக்கு வழங்கப்படுவதாகவும் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<<< >>>>>

பெட்ரோலிய வேதிப்பொருட்கள் மீதான இறக்குமதி வரி, ஜூன் மாதம் இறுதி வரை ரத்து செய்யப்படுவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், மேற்காசியாவில் நிலவும் சூழல் காரணமாக மக்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதை கருத்தில் கொண்டு, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<< >>>>>

பாதுகாப்பு தளவாடங்கள் ஏற்றுமதி கடந்த நிதியாண்டில் 38 ஆயிரத்து 424 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளதாக பாதுகாப்பு துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இது, அதற்கு முந்தைய நிதியாண்டுடன் ஒப்பிடுகையில் 62 சதவீதம் அதிகமாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் உற்பத்தியாகும் பாதுகாப்பு தளவாடங்களுக்கு உலகளாவிய அங்கீகாரம் கிடைதிருப்பதையே இது உணர்த்துவதாக அவர் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு தளவாடங்கள் ஏற்றுமதியில், இந்தியா தொடர்ந்து முத்திரை பதித்து வருவதாகவும் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

<<<<<< >>>>>

மின் நுகர்வோர், மின் நுகர்வோர், Prepaid ஸ்மார்ட் மீட்டர்களை பயன்படுத்த வேண்டும் என்பது கட்டாயமல்ல என்று மத்திய மின்துறை அமைச்சர் திரு. மனோகர் லால் கூறியுள்ளார். ஸ்மார்ட் மீட்டர்களை பயன்படுத்த வேண்டும் என்பது கட்டாயமல்ல என்று மத்திய மின்துறை அமைச்சர் திரு. மனோகர் லால் கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், நுகர்வோர் தங்களது விருப்பத்தின் பேரில் இந்த மீட்டர் முறைக்கு மாறலாம் என்று தெளிவுபடுத்தினார்.

இதன்மூலம், நுகர்வோர் மட்டுமின்றி சம்பந்தப்பட்ட மாநில அரசுகளும், மின் விநியோக நிறுவனங்களும் பயனடையும் என்று அமைச்சர் கூறினார்.

<<<<<< >>>>>

விமான பயணிகளின் பாதுகாப்பில் சமரசம் என்ற பேச்சுக்கே இடம் இல்லை என்று சிவில் விமான போக்குவரத்து துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், இதற்கான சர்வதேச நெறிமுறைகள் அனைத்தும் முழுமையாக பின்பற்றப்படுவதாக கூறினார்.

<<<<<< >>>>>

நாட்டின் வளர்ச்சியில் அஞ்சல் துறை முக்கியப் பங்கு வகிப்பதாக மத்திய அமைச்சர் திரு. ஜோதிராதித்ய சிந்தியா கூறியுள்ளார்

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், Saharanpur அஞ்சல் பயிற்சி மையத்தின் 75வது ஆண்டு தின நினைவு அஞ்சல் தலையை வெளியிட்டு அவர் பேசினார்.

இந்தப் பயிற்சி மையம் அஞ்சல் துறையைச் சேர்ந்தவர்களுக்கு 75 ஆண்டுகளாக சேவையாற்றி வருவது வரலாற்றுச் சிறப்புமிக்கது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த மையத்தின் மூலம், இரண்டரை லட்சத்திற்கும் மேற்பட்ட அஞ்சல்துறை ஊழியர்கள் பயிற்சி பெற்றுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

<<<<<< >>>>>

மேற்காசியாவில் நிலவும் சூழல் குறித்து கண்காணித்து நடவடிக்கை மேற்கொள்வதற்காக அமைக்கப்பட்ட அமைச்சகங்களுக்கு இடையேயான குழுவின் இரண்டாவது கூட்டம் இன்று புதுதில்லியில் நடைபெறவுள்ளது.

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில், சமையல் எரிவாயு கையிருப்பு மற்றும் உர விநியோகம் குறித்து விரிவாக விவாதிக்கப்படவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<< >>>>>

மேற்குவங்கத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளுக்கு எதிராக நடைபெற்ற ஆர்ப்பாட்டங்கள் மற்றும் வன்முறைச் சம்பவங்கள், அம்மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு முற்றிலும் சீர்குலைந்ததை உணர்த்துவதாக உச்சநீதிமன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக கொல்கத்தா உயர்நீதிமன்ற நீதிபதி அனுப்பிய கடிதத்தின் அடிப்படையில் விசாரணை மேற்கொண்ட தலைமை நீதிபதி திரு. சூர்யகாந்த், நீதிபதி திரு. Joymalya Bagchi, நீதிபதி திரு. விபுல் பஞ்சோலி அமர்வு இதனை தெரிவித்தது.

மால்டா மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து, அப்பணியில் ஈடுபட்ட நீதித்துறை அதிகாரிகளை பிடித்து வைத்து, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது கடும் கண்டனத்திற்குரியது என்றும் நீதிபதிகள் கூறினர்.

சட்டத்தை தங்கள் கையில் எடுத்துக் கொள்வதற்கு யாருக்கும் அனுமதியில்லை என்றும், அரசு நிர்வாகத்தின் தோல்வியை இது உணர்த்துவதாகவும் நீதிபதிகள் தங்களது உத்தரவில் தெரிவித்தனர்.

நிலைமையின் தீவிரத்தை உணர்ந்து அவசரமாக இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொண்டதாகவும் நீதிபதிகள் கூறினர்.

இந்த சம்பவம் தொடர்பாக காவல்துறை தலைவர் மற்றும் உயரதிகாரிகள், வரும் 6ஆம் தேதி, மாலை 4 மணிக்கு ஆஜராகி விளக்கமளிக்க வேண்டும் என்றும் அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கு விளக்கமளிக்குமாறும் உச்சநீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

இந்த வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக, சிபிஐ மற்றும் தேசிய புலனாய்வு முகமையின் விசாரணையை தேர்தல் ஆணையம் கோருவதற்கு அனுமதி அளித்தும் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேற்குவங்க சட்டப்பேரவைக்கு இரண்டாம் கட்டமாக வரும் 29ஆம் தேதி 142 தொகுதிகளில் நடைபெறவுள்ள தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கியது.

மனுக்களை தாக்கல் செய்ய வரும் 9ஆம் தேதி கடைசி நாளாகும்.

அதற்கு மறுநாள் மனுக்கள் மீதான பரிசீலனை மேற்கொள்ளப்படும்.

மனுக்களை விலக்கிக் கொள்ள வரும் 13ஆம் தேதி கடைசி நாளாகும்.

இம்மாநிலத்தில் முதல்கட்ட வாக்குப்பதிவு வரும் 23ஆம் தேதி நடைபெறவுள்ளது.

இரு கட்டங்களிலும் பதிவாகும் வாக்குகள் எண்ணும் பணி, அடுத்த மாதம் 4ஆம் தேதி மேற்கொள்ளப்படும்.

<<<<<< >>>>>

கேரளம் சட்டப்பேரவை தேர்தலுக்கான தேர்தல் அறிக்கையை காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி வெளியிட்டுள்ளது.

அரசு பேருந்துகளில் மகளிருக்கு இலவசப் பயணம், கல்லூரி செல்லும் பெண்களுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் உதவித்தொகை உள்ளிட்ட அறிவிப்புகள் இதில் இடம்பெற்றுள்ளன.

சிறு வியாபாரிகளுக்கு 5 லட்சம் ரூபாய் வரை வட்டியில்லா கடன் வழங்கப்படும் என்றும், அங்கன்வாடி பணியாளர்களுக்கான ஊதியம் உயர்த்தப்படும் போன்ற வாக்குறுதிகளும் தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ளன.

<<<<<< >>>>>

மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் வகையில் தமது அரசு செயல்பட்டு வருவதாக தெலங்கானா முதலமைச்சர் திரு. ரேவந்த் ரெட்டி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர். மாநிலம் முழுவதும் இன்று நடைபெறவுள்ள கிராமசபைக் கூட்டத்தில் பெறப்படும் கோரிக்கை மனுக்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

மக்களுக்கான நிர்வாகம் என்ற இயக்கத்தின் ஒரு பகுதியாக, இந்த கிராமசபைக் கூட்டங்கள் நடைபெறுவதாகவும் அவர் கூறினார்.

மக்கள் நலனை கருத்தில் கொண்டே அனைத்து முடிவுகளும் மேற்கொள்ளப்படுவதாகவும் திரு. ரேவந்த் ரெட்டி தெரிவித்தார்.

<<<<<< >>>>>

உத்தரபிரதேசத்தில் நேரிட்ட சாலை விபத்தில் 3 பெண்கள் உயிரிழந்தனர், 18 பேர் காயமடைந்தனர்.

கிருஷ்ணாநகர் மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதியில், டிராக்டர் கட்டுப்பாட்டை இழந்து, கால்வாயில் விழுந்ததில் இந்த விபத்து நேரிட்டதாக அம்மாநில காவல்துறையினர் தெரிவித்தனர்.

<<<<<< >>>>>

குஜராத்தில் இன்று நில அதிர்வு உணரப்பட்டது.

Navasari மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதிகளில் ஏற்பட்ட இந்த நில அதிர்வு ரிக்டர் அளவில் 3 புள்ளி நான்காக பதிவானது.

<<<<<< >>>>>

உலக பாரா வில்வித்தைப் போட்டியின் ஆடவர் மற்றும் மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

பாங்காக்கில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் Shyam Sunder - Toman Kumar இணை தாய்லாந்து இணையை வென்றது.

மகளிர் பிரிவு இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்திலும் Sheetal Devi - Payal Nag இணை, தாய்லாந்து இணையை வென்று இறுதியாட்டத்திற்கு முன்னேறியது.

--------------

*ஆசிய குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில், இந்தியாவின் ஆதித்யா காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.*

*மங்கோலியாவின் Ulaanbaatar-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 65 கிலோ எடைப்பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 5-0 என்ற புள்ளிக்கணக்கில் சவுதி அரேபியாவின் Mousa Alhawsaw-வை வென்றார்.*

----------------

*Candidates Chess போட்டியில் இந்தியாவின் Praggnanandhaa - ஜெர்மனியின் Bluebaum Matthias இடையேயான நான்காவது சுற்று ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.*

*சைப்ரஸில் நடைபெற்று வரும் இப்போட்டியில் Praggnanandhaa தற்போது 2 புள்ளிகளுடன் 3-வது இடத்தில் உள்ளார்.*

*<<<<<<END>>>>>*